**இரண்டாம் கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,**
**ஈரோடு.**

**OS**.48/2018

வா.சா.1 **திரு.**பி.பாலசுப்பிரமணியம்

09.12.2021.

1 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

நான் தற்போது குடியிருந்து வரும் விலாசத்தில் கடந்த சுமார் 25 வருடங்களாக குடியிருந்து வருகிறேன். தாவா சொத்தை 7 முதல் 11 பிரதிவாதிகளிடமிருந்து கிரையம் பெற்றுள்ளோம். நாங்கள் கிரையம் பெற்ற மனையின் எண் என்ன வென்றால் தாவா சொத்து விபரத்தில் மனை எண் குறிப்பிடப்படவில்லை. ரீ.ச.எண். 785/1, 2, 3 மற்றும் 4 என்ற எண்ணில் கண்ட மனை நிலங்களை பிரித்து, அதில் 3982-1/2 சதுர அடி நிலம் தாவாவில் முதல் தாக்காக குறிப்பிடப்பட்டுள்ளதை நானும், எனது தகப்பனாரும் கிரையம் பெற்றோம். தாவா சொத்தை யார் மூலம் கிரையம் பெற்றோம் என்றால் 7 முதல் 11 பிரதிவாதிகளிடமிருந்து கிரையம் பெற்றோம். 7 முதல் 11 பிரதிவாதிகள் எனது உறவினர்கள் அல்ல என்றால் சரிதான். அவர்கள் அனைவரும் வெவ்வேறு இடத்தில் வசித்து வருகின்றனர். 7 முதல் 11 பிரதிவாதிகள் மேற்படி நிலத்தை யாரிடமிருந்து கிரையம் பெற்றார்கள் என்றால் ராமகிருஷ்ணன் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றுள்ளனர். மேற்படி ராம கிருஷ்ணன் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். அவர் மேற்படி நிலத்திற்கு ரத்து செய்யப்பட முடியாத அதிகாரம் பெற்ற முகவராக இருந்து, மேற்படி நிலத்தினை விற்பனை செய்துள்ளார். தாவா சொத்தை பொறுத்து ஆஜிமாபீவி என்பவர் ராமகிருஷ்ணனுக்கு அதிகாரம் வழங்கிய முதல்வர் ஆவார். மேற்படி ஆஜிமாபீவியையும் இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். மேற்படி தாவா சொத்தை ராமகிருஷ்ணனிடமிருந்து, 7 முதல் 11 பிரதிவாதிகள் 1 முதல் 4 மனைகளாக பிரித்து கிரையம் பெற்றார்கள் என்றால்

சரிதான். மேற்படி நான்கு மனைகளை, 3982-1/2 என்ற அளவுகளில் இரு மனைகளும், 3960 என்ற அளவில் ஒரு மனையும் ஆக மூன்று மனைகளாக பிரித்து , 3982 1/2 அளவு கொண்ட இரு மனகைளை முறையே நானும், எனது தகப்பனாரும் ஒரு தரப்பினராகவும், எனது மாமியார் ஒரு தரப்பினராக இருந்தும் மற்றும் 3960 அளவு கொண்ட மனையை எனது சின்ன மாமியார் கனகவள்ளியும் கிரையமாக பெற்றோம். நானும், எனது தகப்பனாரும் கிரையம் பெற்ற மனை தாவா சொத்து விபரத்தில் ரீ.ச.எண். 785/1, 2, 3 மற்றும் 4 என குறிப்பிடப்பட்டுள்ளது.

**1 ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குவி ஒத்தி வைக்கப்படுகிறது.**